


# அப்புச்சி

23.12.2015

மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு வட்டுவாகலை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்
# வெற்றிவேலு மயில்வாகனம்
# அவர்கள்
# இறைபதம் அடைந்த நினைவாகத் தந்தோம்
# "அப்புச்சி"

**23.12.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்

நடமாடும் தெய்வமாய் வாழ்ந்து
நம்மையெல்லாம் மனிதராக்கி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ம் நாள் நினைவுகள்



தோற்றம்

29 . 08 . 1924

மறைவு

23 . 11 . 2015

அமரர்

## வெற்றிவேலு மயில்வாகனம்

வட்டுவாகல் முல்லைத்தீவு

## தீதி வெண்பா

மன்மத ஆண்டதனில் அமைந்த கார்த்திகைத்திங்கள்
மாண்புறும் பூர்வபட்ச திரியோதசித் திதியில் - மாட்சிமிகு
மயில்வாகனனார் மண்ணுலகு நீத்து ஈசன்
மலரடி சேர்ந்த நாள்.

(மன்மத ஆண்டு கார்த்திகை மாதம் திங்கட்கிழமை பூர்வபட்ச திரியோதசி நாள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்–விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணியின் கனிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பா நீக்கி
நுழைதரு நூ லினர் ஞாலஞ்
கோயிலுஞ் சுனையுஞ் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகொண்டுள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சருகாதல்

பதுமை போன்ற உனது உடல்
முதுமை வரைக்கும் காத்த போதும்
நோயது தந்த வேதனை யாலே
காயாய் கனியாய்ச் சருகாய் மாறி
அகவை ஈங்கு தொண்ணூற்றிரெண்டில்
செகமதை விட்டுப் பிணமதாய் மாற
கைப்பிடி நாயகி கதறித் துடித்து
இப்புவி தன்னில் ஏங்கியே வீழ
பெற்றிடு மக்களும் பெறா மக்களும்
பற்று மிகுதியால் பதைத்துப் புலம்ப
மற்றும் மருகர் மருகியர் விம்மி
முற்றம் முழுதும் கண்ணீர் சிந்த
துன்பம் பெருகியே சோதரர் தவிக்க
அன்பு மைத்துன, மைத்துனி மார்கள்
ஒன்றாய்க் கூடி உளமது சோரப்
பன்னுதற் குரிய அன்பர்கள் கலங்கக்
காரது பொழியும் பெருமழை போலப்
பேரர் பேத்தியர் பேதலித் தழவே
சிந்தை யுறைந்திடு பூட்டர் பூட்டியர்
கொந்தளிப் புடனே கோவென்று குளறிட
சீலம் நிறைந்த அப்பு உன்னுயிர்
ஞாலம் விடுத்து நற்கதி பெற்றதே!

-புதுவை இரத்தினதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "அப்புச்சி" அணையாத அகல்விளக்கு

அழகிய ஈழவள நாட்டிற்கு அழகு சேர்ப்பது முல்லை மாவட்டம். அந்த அழகும் பொலிவும் நிறைந்த முல்லை மாநகரின் வட புலத்தே,முல்லை-புதுக்குடியிருப்பு வீதியிலே, மருதமரங்களும்,வேப்பமரங்களும் கடற்காற்றில் அசைந்து மாருதம் வீச பாய்ந்தோடும் நந்திக்கடல் ஆற்றின் சலசலப்பின் அருகே அழகாக உயர்ந்து நிற்பது சப்தகன்னிமார் ஆலயம். இந்த ஆலயத்தை சூழவுள்ள பழம்பெரும் கிராமம் வட்டுவாகல் என்னும் வளமான கிராமமாகும்.

அந்தக் கிராமத்திலே விருந்தோம்பி வேளாண்மை செய்து வந்த பழங்குடி மகனான வெற்றிவேலு பச்சைமுத்து தம்பதியினரின் மூத்தபுதல்வனாக 1924-08-29ம் திகதி மயில்வாகனம் அவர்கள் அவதரித்தார். மகனின் அழகையும் பொலிவையும் கண்ட பெற்றோர் அழகுத் தெய்வம் முருகனின் பெயர் துலங்க மயில்வாகனம் என்னும் பெயர் சூட்டி பாசத்தையும் அன்பையும் பொழிந்து வளர்த்து வந்தனர். அன்னையின் மடியில் அவரது அரவணைப்பில் அன்புடன் அகமகிழ்ந்திருந்த வேளை, பாசமிகு அன்னை பச்சைமுத்துவுக்கு ஏற்பட்ட நோயினால் மகன் மயில்வாகனத்தைப் பரிதவிக்க விட்டுப் பாதியிலே வாழ்வை முடித்துக் கொண்டார். மாதாவை இழந்து பரிதவித்த மகனின் நிலை கண்டு வெற்றிவேலு அவர்கள் நாயகம் என்னும் நல்லாளை மறுமணம் செய்து கொண்டார். அவர்களின் இல்லற வாழ்வில் அழகம்மா என்னும் சகோதரியும் சண்முகம் என்னும் சகோதரனும் வந்து சேர மூவரும் ஒன்றாகி பாகுபாடின்றி தாயார் நாயகத்தின் அரவணைப்பில் அகமகிழ்ந்து பாசத்துடன் வளர்ந்து வந்தனர்.

இளமையில் மிகவும் சுறுசுறுப்புடன் காணப்பட்ட மயில் கல்வியில் ஓரளவு கற்றுத் தேறிய பின் தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டார். தம்பி சண்முகம் கல்வியில் முன்னேறி கற்பிக்கும் ஆசானாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபராகத் திகழ்ந்தார். தங்கை அழகம்மா இவர்களின் முன்னேற்றத் திற்கு உதவியாக இருந்தார். தம்பி தங்கையின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து தந்தையுடன் சேர்ந்து தண்ணி முறிப்பிலும்,வட்டு வாகலிலும் தமது வயல் காணிகளில் நெற்செய்கை பண்ணி சிறந்த விவசாயியாகத் திகழ்ந்தார்.மாடு வளர்ப்பதிலும் காளைகளைப் பயிற்றுவித்து உழவுக்குப் பயன்படுத்துவதிலும், வண்டிலில் பூட்டி சவாரி செய்வதிலும் கைதேர்ந்தவராக இருந்தார்.

தாய் தந்தையரின் வளர்ப்பில் சமயப்பற்று நிறைந்தவராகத் திகழ்ந்தார்.வட்டுவாகலில் குடி கொண்டிருக்கும் சப்த கன்னிமார் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தார். திங்கட்கிழமை தோறும் அன்னையரை வணங்கத் தவறமாட்டார். பொங்கல் காலங்களில் ஐயருக்குத் தூளி கொடுத்துப் பாண்டி விளையாடும் விழாவில் முக்கிய பங்கேற்பார். வருடம் தோறும் கோயிலில் அரங்கேறும் காத்தவராயன் கூத்தில் காத்தவராயனா கவும் டாப்பர்மாமாவாகவும் நடித்து சிறந்த கலைஞரா கவும் திகழ்ந்தார்.

இவர் வாலிப வயதை அடைந்தபோது காளை மாடுகளை வாங்குவதற்காக வவுனியா மாமடுவிற்கு வந்திருந்த வேளை இவரின் குணநலன்களையும் அழகையும் கண்டு கச்சைக் கொடி புளியங்குளம் பகுதியில் விருந்தோம்பலில் சிறந்து, வன்னியின் காவலனாகத் திகழ்ந்த ஆறுமுகம்-மாதாத்தை தம்பதியினர், தந்தை வெற்றிவேலுவுடன் பேசி தமது மகள் கற்பகத்தை மயில்வாகனனாருக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

இல்வாழ்வில் இணைந்து கொண்ட இருவரும் இல்லறமாம் நல்லறத்தை ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இன்பமயமாக்கி இனிதே வாழ்ந்து வரும்போது இல்வாழ்வின் இன்ப ஊற்றில் ஐந்து பெண் பிள்ளைகளும் மூன்று ஆண்பிள்ளைகளுமாக எண்மரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றெடுத்தனர். பிள்ளைகளின் மழலை யின் மகிழ்ச்சியில் திளைத்த மயிலும் கற்பகமும் மாண்புற பிள்ளைகளை வளர்த்து வரும் வேளையில் மூத்த மகன் திருஞானமூர்த்தி நோய் வாய்ப்பட்டு தனது 19[வது] வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். மகனின் பிரிவுத்துயரிலிருந்து சிறிது சிறிதாக மீண்ட வேளை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஆண் பரிசாரகராகக் கடமையாற் றும் வாய்ப்புக் கிடைத்தது. சில வருடங்கள் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரும்பணியாற்றிய அண்ணல் போக்குவரத்தில் ஏற்பட்ட இடைஞ்சல்களி னால் அந்த வேலையைக் கைவிட்டு விவசாயத்திலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டார்.

தண்ணிமுறிப்பில் வயற் செய்கையின் போது தன்னைச் சுற்றியுள்ள அளம்பில் குமுழமுனை, தண்ணீரூற்று வயற்கார நண்பர் களுடன் காவற்குடிலில் கனமான பகிடிக்கதைகள் சொல்லித் தன்பால் ஈர்த்தவர். "மயிலண்ணை, மயிலண்ணை" என அவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட மயிலண்ணை லைசென்ஸ் துவக்கு வைத்திருந்த சிறந்த வேட்டைக்காரராகவும் திகழ்ந்தார். காவலின் போது வரும் மிருகங்களை வேட்டையாடி எல்லோருக்கும் பகிர்ந்தளித்து வீட்டுக்கும் கொண்டு வருவார். காட்டிறைச்சியில் மயிலண்ணை சொட்டுப்பால் விட்டு வேட்டையவியல் கறிவைத்தால் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம் என்று சுற்றியுள்ள வயற்காரர்கள் பெருமையாகப் பேசிக் கொள்வார்கள். அந்த அளவிற்கு அவரின் கறி மிகவும் ருசிகரமானது.

வெள்ளைச் சேட்டும் வெள்ளைச் சாரமும் மயிலண்ணையின் வெள்ளையுள்ளத்தை எடுத்துக்காட்டும். அன்பும் அறிவுத் திறனும் கொண்ட மனையாள் கற்பகத்தின் வழிகாட்டலில் எல்லோரும் போற்ற நல்லதொரு குடும்பமாக வட்டுவாகலில் உயர்ந்து நின்றார்கள். பிள்ளை கள் அனைவரையும் கல்வி கற்க வைத்து உரிய வயதில் எல்லோருக்கும் சீர்வரிசைகள் செய்து நல்ல துணைகளை வாழ்வில் இணையச் செய்து நற்பிரஜைகளாக வாழவைத்தனர்.

செல்வச் செழிப்போடு வாழ்ந்து வரும் வேளையிலே வட்டுவாகல் கிராமத்தை வளம் பெறச்செய்யப் பல நற்பணிகளைச் செய்து வந்தார். வட்டுவாகலில் பிள்ளைகள் கல்வி கற்க பாடசாலை இல்லாத நிலையில் பாடசாலை ஒன்றை நிறுவ அரசு முனைந்த போது தமது காணியை வழங்கி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். அத்தருணத்தில் வட்டுவாகல் உறவுகள் சேர்ந்து அவரை முள்ளிவாய்க்கால் கிராமசபையின் தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தனர். வெற்றியீட்டிய மயில்வாகனனார் ஒரு முறை சபையின் தலைவராகவும் (Chairman) தெரிவானார் சபையின் தலைவரான மயில்வாகனனார் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை முன்னேற்றி மக்கள் மனதில் நிலைத்து நின்றார். தனது வெற்றிக்குப் பிள்ளையார் தான் துணை நின்றார் என்ற நினைவு மேலிட வட்டுவாகலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையார் சிலை ஒன்றை வைத்து வணங்கி நாவலடிப் பிள்ளையார் கோயில் ஆரம்பிக்க மூலகாரணமாக விளங்கினார்.

பிள்ளையாரின் துணையில் மக்கள் பணியின் மகத்துவத்தில் பேரப்பிள்ளைகளின் மழலையில் மயிலும் கற்பகமும் மன மகிழ்ச்சியில் மூழ்கி இருந்த வேளை காலத்தின் மாற்றத்தால் நாட்டில் பல அசாதாரண நிலைதோன்ற குடும்பம் புதுக்குடியிருப்பிற்கு இடம் பெயர்ந்தது. இடப்பெயர்வில் ஏற்பட்ட இன்னல்களால் மனம் ஒடிந்து உடல் தளர்ந்த கற்பகம் நோய் வாய்ப்பட்டார். மயிலும் பிள்ளைகளும் ஓடி ஓடிப் பராமரித்தார்கள். வைத்தியர்களும் தாதிமார்களும் பலவழிகளிலும் முயன்று பார்த்தார்கள். முடிவில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கற்பகம்மாள் காலனின் பிடியில் அந்தப் பரமனின் பாதம் சேர்ந்தார். மனைவியின் இழப்பு மயில்வாகனனாரை மிகவும் பாதித்திருந்தது. பெண்பிள்ளைகள் எல்லோரும் அவரைப் பராமரித்து ஆறுதல் வார்த்தை கூறி அன்போடு பார்த்துக் கொண்டார்கள். இரண்டு ஆண் பிள்ளைகளும் வெளியில் இருந்து தொலைபேசியில் ஆறுதல் வார்த்தை கூறி ஐயாவைக் கவனமாக பாருங்கள் என்று சகோதரிகளைக் கேட்டுக் கொண்டார்கள். பின்னர் அவரும் ஒருவாறு மனம் தேறி கோயில் குளங்கள் என்று தமது வாழ்நாளை மகிழ்ச்சியாகக் கழிக்கத் தொடங்கி னார்.

இந்நேரத்தில் தான் நாட்டில் இடப்பெயர்வுகளும் போர் அனர்த்தங்களும் ஏற்பட்டது. முள்ளிவாய்க்காலில் இடம் பெயர்ந்திருந்த மயில், மகளும் பேரனும் சென்ற கப்பலில் தானும் ஏறித் திருமலை சென்று, பின்னர் வவுனியா செட்டிக்குளம் முகாமில் தங்கியிருந்து, துன்பங்களை எல்லாம் அனுபவித்தார். பின்பு முகாமைவிட்டு வெளியேறி வவுனியா இறம்பைக்குளத்தில் மகளுடன் வசித்து வந்தார். வட்டு வாகலுக்கு எல்லோரும் மீளக்குடியமர்ந்த பின்பும் அவர் வவுனியாவி லேயே தங்கியிருந்து எல்லாப் பிள்ளைகளிடமும் சென்று பேரப்பிள்ளை கள் பூட்டப்பிள்ளைகளுடனும் குதூகலமாக சிரித்துப் பேசி விட்டு வருவார். எல்லாப் பிள்ளைகளையும் பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளைகளையும் "அப்புச்சி" என்று அன்பாகவே கூப்பிடுவார். அவர் "அப்புச்சி அப்புச்சி" என்று பிள்ளைகளைக் கூப்பிட்ட பழக்கத்தின் அழகு கண்டு எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவரை "அப்புச்சி" என்று அழைக்க ஆரம்பித்தார்கள் பின்னர் எல்லோர் வாயிலும் வந்த "மயிலண்ணை" அப்புச்சி ஆகமாறிவிட்டது.

இந்த வேளையில் பேரன் வேந்தன் தனது திருமணத்திற்காக இந்தியாவுக்கு வரும்படி அழைத்திருந்தார். பல நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள மகள் குடும்பத்துடன் இந்தியாவிற்கு பறந்து சென்றார். பேரனுடன் கும்மாளமடித்து குதூகலமாகத் திரிந்தார். திருமணம் முடிந்த பின் பேரனும் பேத்தியும் எல்லோரையும் இந்தியா வின் பிரசித்தி பெற்ற இடங்களுக்குச் சுற்றுலாவாக கூட்டிச் சென்றார்கள். பழனி, திருவனந்தபுரம், மதுரை மீனாட்சி, உச்சிப்பிள்ளையார் என்று பல திருத்தலங்களுக்கும் சென்றதோடு கேரளாவில் படகில் பயணம் செய்து ஒரு நாள் முழுவதும் இரவும் பகலும் உணவு சமைத்து சாப்பிட்டு உல்லாசமாகப் பொழுதைக் கழித்து திரும்பிய காட்சிகள் நினைவில் என்றும் மறக்க முடியாத காட்சிகள் எனக் கூறுவார். ஒரு மாதகாலம் இந்தியாவில் பேரனுடன் குதூகலமாக கழித்த மயில் இலங்கைக்குத் திரும்பி வந்து வவுனியாவில் மகளுடன் தங்கியிருந்தார்.

வவுனியாவில் தங்கியிருந்த காலத்தில் எல்லாக் கோயில் திருவிழாக்களுக்கும் செல்வார். கதிர்காமம், திருக்கேதீஸ்வரம், புதூர் புதுக்குளம் என்று ஒருகோயிலும் தவறமாட்டார்.எனக்கென்ன எல்லாப் பிள்ளைகளும் நல்லா இருக்கிறாங்கள் பிள்ளையார் என்னைக் கைவிட மாட்டார் என்று அடிக்கடி கூறுவார்.

90 வயது வரை சுகதேகியாகச் சுற்றித்திரிந்தவர். சைக்கிள் ஓடித் தன் காரியங்களைப் பார்த்தவர். கண்பட்டதைப்போல 92 ஆவது வயதில் 2015-பங்குனி மாதம் அவருக்கு ஏற்பட்ட குடற்புண் வியாதி முற்றி சாப்பிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் சிகிச்சை பெற்றார். வவுனியா வைத்தியசாலை விடுதியில் பல நாட்கள் தங்கியிருந்தார். பிள்ளைகளும் பேரன் பேத்திகளும் ஓடி ஓடிப் பராமரித்தார்கள். மருமகன் நிமால் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இரவும் பகலும் கண்துஞ்சாது மருமகனாக இல்லாது பெற்ற மகனுக்கும் மேலாக நின்று பராமரித்தார். இளையமகன் வழியில், மருமக்கள் உறவில் வந்த உஷாவும், அகிலனும் கூடத் தமது கடமைக்கு மேலாக மாமனாரைக் கவனித்தார்கள். இருந்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தியர்களும் தாதிமாரும் எவ்வளவோ முயன்றும் அவரைச் சாப்பிடவைக்க முடியவில்லை. இறுதியில் தண்ணீர் சாப்பாடு மட்டும் போவதற்கு வழி சமைத்து வீட்டுக்கு கொண்டு செல்லும்படி சொல்லி விட்டார்கள். வவுனியாவில் பெண்பிள்ளைகள் ஒருவர்மாறி ஒருவர் இரவும் பகலும் நீராகாரம் வழங்கி பராமரித்துக் கொண்டார்கள். மயிலின் உடல் நிலையறிந்து ஆசிகுளம், புதுக்குளம், கல்மடு, வட்டுவாகல் என்று பல இடங்களிலிருந்தும் உறவுகள் வந்து பார்த்து ஆறுதல் கூறினார்கள். வெளிநாட்டில் இருந்து தம்பியார் சண்முகத்தின் மகனும் மகள்மாரும் இளையமகனும் மனைவி, பேரப்பிள்ளைகளும் மூத்தமகன் அனுப்பிய நண்பர்கள் பலரும் வந்தார்கள். எல்லோரும் வந்து பார்த்து ஆறுதல் கூறினார்கள். எல்லோரையும் பார்த்த மகிழ்ச்சியும் இளையமகன் நிற்கின்றார் என்ற நினைவும் மேலிட அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டு மனம் நிறைந்து காணப்பட்டார். எந்தக் குறையும் இல்லாமல் எட்டு மாதங்கள் பிள்ளைகள் அனைவரும் மாறி மாறிப் பராமரித்தார்கள்.

என்ன இருந்தும் எந்தக் குறைகளும் இல்லாமல் பார்த்தாலும் கூட இறைவன் எழுதிய விதியை மாற்ற முடியவில்லை. 2015 கார்த்திகை மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை இரவு நேரம் 9.45 மணியளவில் பிள்ளைகள் எல்லோரும் சுற்றி நிற்க பூட்டப்பிள்ளைகள் தேவாரம் படிக்க மகள்மார் சிவபுராணம் பாட மயில்வாகனனாரின் ஆத்மா சிவனாரின் பாதத்தில் சங்கமமானது. **மரணம் என்பது நியதி. இது, தருணம் இல்லாவிடினும் எம்மால் தவிர்க்க முடிவதில்லை. அப்புச்சியின் இழப்பு ஈடு செய்ய முடியாதாயினும் பிறந்தவர் இறப்பார் என்ற பேருண்மையோடு மன அமைதி கொள்வோம்.**

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

காளித்தாயே!
ஊழிக் கூத்தின் முதல்வி!
வந்தாய் எம் வாசலில் நேற்று.
திரும்பும் போது
அப்புச்சியைத் திருடிச் சென்றாயடி
சிம்மவாகினி!
உன் பாத அரவிந்த நிழலில்
அப்புச்சிக்கோர் ஆசனம் அருள்க
இனியாயினும் அவர் கொஞ்சம் இளைப் பாறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்



**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் னடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி!
தேச னடி போற்றி சிவன்சே வடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என்உள்ளதுள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலைனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராத அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர் வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கிழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிகாப்பு

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடுபொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியெல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்.
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால், பழங்கள், வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து - வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமைமுடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச்செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டுகடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொற்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபதுநாள் வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்



திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனையாறனம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நீ லாமே
குனிமின் தொழுமினெங் கோனங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுந்தர நீறணிந்த தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கெய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்திக்
தேசமெல் லாம்புகழ் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் பொதா தென்றெ
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலைக்கு மருமகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னம் பெருந் து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டாருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொரடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்மலை மங்கை நல்லீர்
பொற்றிருச் பொற் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் பொற் சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இரும்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
போற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போத்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன மப்புரம் எய்தல பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நாயன்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மந்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே


வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்கு
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்கு
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
காதியும அந்தமும் ஆயி னாரு
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்த கன்னியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகி நிற்கும் உறவுகள்



**எங்கள் இதயம் தாங்குமோ?**

**தனையர்களின் தவிப்பிலிருந்து....**

*புத்திரர்கள் - ம.பத்மநாதன் (புலேந்திரன்)*
*ம.வேகாவனம் (முல்லைவேந்தன்)*

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
வைத்தெம்மை வளர்த்தெடுத்த அன்புத் தந்தையே!
வட்டுவாகலில் தலைநிமிர்ந்து நாம் நிற்க
வளங்கள் பல தந்து வாழ்வளித்த வள்ளலே!

கல்வி தந்தாய்,களனி தந்தாய்,களஞ்சியப்
பொறுப்பின் பதவி தந்தாய் - கலைகள் பல கற்றிட
கன்னிகா றேடர்ஸின் உரிமை தந்தாய் - இத்தனைக்கும்
காரணமாம் நான் என்ன செய்தேன் தங்களுக்கு,
நலமிழந்து தாங்கள் நின்றபோதும் நின்குரலைக்
காது குளிரக் கேட்டேனே ஒழிய,
ஓடி வந்து பார்க்க நாதியற்ற பாவியானேன்
தவிக்கிறேன் இங்கு தனியாக..

"அண்ணன் வந்தால் பிரச்சனை - அவனை வர
வேண்டாம்" என்று சொல்லு தம்பி.
அப்புச்சி சொன்ன வார்த்தை - என்
அடிமனதில் உறுத்துதையா - நான்
ஓடிச் சென்ற போது தேடிவந்து அடித்தார்களே!
எப்படித் தாங்கினீர்கள் ஐயா! தந்தை எனும்
பிணைப்பினாலா? தாங்க முடியவில்லையே
தளராத உங்கள் பாசத்தவிப்பை..

அண்ணன் வரமாட்டான் நீ வரவேண்டுமென்றீர்!
ஓடி வந்தேன் உம் உடல்நலம் காக்க - முடியவில்லை
உங்கள் நோயின் துயரம்தீர்க்க என் செய்வேன்!
காலன் இட்ட கட்டளையில் கனல் ஆனீரே ஐயா
"அப்புச்சி" என்று இனி யாரை அழைப்பேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆச்சி என்று அழைக்க அப்புச்சி வருவாரா?

**புத்திரிகளின் விசும்பலில் எழும் விம்மல்கள்!**
*பெண்கள் ஐவர் - பா.கோகிலாதேவி, செ.கணேசம்மா,*
*த.கலாநிதி, மா.கெங்காதேவி ,ம.தவனேஸ்வரி*

ஆச்சி என்ற அன்பான சொல்லைத் தவிர
அதிகாரமாக அழைத்தது நாமறியோம்!
அன்பான சீர்வரிசை அனைவருக்கும் தான்தந்தீர்
பண்பாக எம் மனம் விரும்பும் துணைகளையும் தேடித்தந்தீர்
அம்மாவை இழந்த போதும், அன்பு காட்ட
ஐயா நீங்கள் இருக்கின்றீர்கள் என்றிருந்தோம்
அகவை தொண்ணூறு தாண்டியும் துடியாட்டமாக
சைக்கிளில் சுற்றித் திரிந்தீரே !
கண்பட்ட மேனியிலே புண்பட்டதேனோ?
எட்டு மாதம் நோயில் இடிந்து போனீரே!
எக் குறையும் இல்லாமல் பக்குவமாய்
பராமரித்து ஏந்தி எடுத்தோமே!
"உங்களுக்கு கரைச்சல் ஆச்சி என்னாலே" என்றீரே
என்ன கரைச்சல் எங்களுக்கு இன்னும் சிலநாள்
எம்மோடு இருந்திருக்கலாமே மனமகிழ்வோடு
எம் தெய்வத்திற்கு பணிவிடை செய்ய மறுத்திட்டானே
பரமன் என் செய்வோம்!
ஆச்சி என்று எம்மை இனி யார் அழைப்பார்?
எம் தெய்வமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேறமுடியாமல் தவிக்கின்றோம்

**மாறாத சோகத்தில் மருமக்கள்**
*நா.பாலசிங்கம், அ.செல்வரத்தினம், ப.சாந்தநாயகி, செ.தங்கராசா*
*ம.மார்க் அன்ரோ(நிமால்), ந.மதிபாலன், வே.துஷாந்தி.*

மருமக்கள் எங்களை மக்களாகப் பார்த்தீரே!
"மருமோன் எங்கை ஆச்சி"என்று மகளை கேட்பீரே தவிர,
மருமக்களோடு நேருக்கு நேர் பேசி அறியமாட்டீரே!
மாமா மாமி என்ற மரியாதையை உங்கள் வாழிவியலில் தான் நாம்
கண்டோம்.

மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழ, மதியுரை தந்த தந்தையே!
வெள்ளை வேட்டியும் சேட்டும்,நெற்றியில் நீறும்,
சந்தனப் பொட்டும் நின் புன்னகை தவழும் மதிமுகமும்
பேரப்பிள்ளைகளிடம் பகிடி பேசி விளையாடும் விதமும்
தொண்ணூறு தாண்டியும் துவளாத நின் கட்டுடலும்
அன்றும் போல் இன்றும் காட்சி தரும் அழகுக் கோலமும்
காணாமல் போனீரே!
மாறாத சோகத்தில் மருமக்கள் நாம்
தேற முடியாமல் தவிக்கின்றோம்
என் செய்வோம் இறைவா!

## கரை தெரியாமல் கலங்குகின்றோம்

**பெறாமக்கள் பொருமல்**

பெரியப்பா என்றும், பெரியையா என்றும்
குஞ்சியென்றும் வாஞ்சையோடு அழைப்போமே!
தந்தைக்கு தந்தையாக, மதியுரை கூறும் மந்திரியாக,
நோய் வந்த போது எங்களைப் பாதுகாக்கும் பராமரிப்பாளனாக.
பாசத்தோடும், நேசத்தோடும் காட்சியளித்தீரே!
இன்று எங்கள் அன்பைத் துறந்து
எங்கே சென்றீர்?
அலை கடலில் தத்தளிக்கும் மரக்கலம் போல்
கரை தெரியாமல் கலங்குகிறோம் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்பப்பா, அம்மப்பா என்று யாரை இனி அழைப்போம்?

**பேரப்பிள்ளைகளின் குமுறல்**
*பா.சந்திர சீலன், சி.சுமணாவதி, செ.தீபன், சி.றஜனி, ச.வேணி, செ.வேந்தன், ப.நிரோசன், ப.டிலக்ஷன், சி.வதனா, பா.சுவர்ணா, த.ரமணன், த.கோமதன், மா.அனுஷன், ம.பேபிஷா, ம.லிதுஷன், வே.வேதுஷன், வே.விதுஷன்*

பேரப்பிள்ளைகள் எங்களை, ஆச்சி என்றும்
அப்புச்சி என்றும் அன்பு ததும்ப அழைப்பீரே!
வளவுக்குள் வரும் போது வாழைப்பழமும் வணிசும்
வாசம் வீசும் வடையும் வாய்ப்பனும்
கொண்டு வந்து எல்லோரும் வாங்கோ என்று
பார்சல் பிரித்துப் பகிர்ந்தளிப்பீரே!
பள்ளிப்பருவத்தில் நாம் துள்ளித் திரிந்தபோது,
பாதுகாவலராகி நின்று பாதுகாத்தீரே!
எங்கட அப்பப்பா, அம்மப்பா என்று
பெருமையாகச் சொல்லுவோமே!
எங்கள் எல்லோரையும் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர் அப்பா! - இனியாரை
அப்பப்பா, அம்மப்பா என்று ஆசை தீர அழைப்போம்?
என் செய்வோம் தெய்வமே!

## அப்புச்சி, கேக்கும் ஒரேஞ்சும் கொண்டு எப்ப வருவீங்க?

**பூட்டப்பிள்ளைகளின் ஆதங்கம்**
சங்கீதா, தக்ஷணன், பருணிதன், துருபதன், அகல்யன், அனுப்பிரியன், சுகாஷ், வெண்பா, ஸ்ரீமதீசன், சகானா, ஸ்ரீராம், மிதுசனா, நேருஜா, சனோஜித்

பூட்டப்பிள்ளைகள் எங்களைப் பார்க்க
வீட்டுக்கு வந்து ஆச்சி சின்ன ஆக்கள் எங்க
ஐயா பள்ளிக்கூடம் போட்டாரோ என்று
எங்கள் அம்மாமாரைக் கேட்கும்போது
ஒழிந்திருந்து நாங்கள் ஓடிவந்து
அப்புச்சி அப்புச்சி என்றழைக்க
சொப்பின் பாக்கில் கேக்கும், கிறேப்சும்,
ஓரேஞ்சும் எடுத்து உரித்து உரித்துத் தருவீரே!
பட்சமாக நாங்கள், எங்கே எங்கள் அப்புச்சி என்றால்
சாமியிட்டப்போட்டார் என்கிறா அம்மா
எப்ப வருவீங்க? நீங்கள் எங்களுக்கு வேணும் அப்புச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவையின் பதிவிலிருந்து....

**அழுகுதே வட்டுவாகல் கிராமம்**

எத்தனை மக்கள் கூட்டம்
ஏங்கியே உந்தன் பிரிவால்
கத்திடும் கடலும் தோற்கக்
கரைந்துமே கண்ணீர்மல்கி
உத்தமத் துரையே எங்கள்
உயிர்க்கினியான் என்றே
அத்தனை பேரும் சொன்னார்
அழுகுதே வட்டுவாகல் கிராமம்

## தேற்றம்

**ஆறுதல் கொள்வீர் அனைவருமே !**

எழுதிய காலம் வந்திட்டால்
எம்முயிர் ஒருகணம் தங்கிடுமோ
தொழுது கெஞ்சிப் பணிந்தாலும்
துணிந்து போர் மிகு செய்தாலும்
வழுகிய வுயிரெம் உடலகத்தே
வந்து சேர்தல் சாத்தியமோ
அழுத கண்ணீரைத் துடைத்து நின்று
ஆறுதல் கொள்வீர் அனைவருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை பற்றிய பொது விடயங்கள்

- இலங்கையில் முதல் மன்னன் - பண்டுகாபயன்
- இலங்கையின் கடைசி மன்னன் - ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன்
- இலங்கையின் முதல் குளம் - வசவக்குளம்
- இலங்கையின் முதல் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு - 1857
- இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் - 04. 02.1948
- இலங்கையின் குடியரசு தினம் - 22.05.1972
- இலங்கை அரசின் பெயர் - சோசலிய ஜனநாயகக் குடியரசு
- இலங்கையின் முதல் பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
- இலங்கையின் முதல் பிரதமர் - D.S சேனநாயக்கா
- பௌத்த சமயத்தை இந்தியாவிலிருந்து கொண்டுவந்தவர் - மஹிந்த தேரர்
- தேவநம்பிய தீசன் மன்னன் காலத்தில் பரவிய சமயம் - பௌத்தம்
- இலங்கைக்கு அரச இலட்சனையைக் கொண்டுவந்தவர் - சங்கமித்தை
- இலங்கையின் தலைநகரம் - ஜெயவர்த்தனபுர
- இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலமரம் - தெனிபிட்டிய ஆலமரம்
- இலங்கையில் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம் - கட்டுநாயக்கா
- இலங்கையில் நுகர்வோரின் தரத்தை உறுதிப்படுத்தும் இலட்சினை - S.L.S
- இலங்கையில் மிக நீளமான நதி - மகாவலி கங்கை
- இலங்கையில் மிக உயரமான மலை - பீதுருதாலகால மலை
- இலங்கையில் மிக உயரமான குன்று - கொக்காகல
- இலங்கையில் மிகப்பெரிய பூங்கா - பேராதனை
- இலங்கையில் மிகப்பெரிய தீவு - நெடுந்தீவு
- இலங்கையில் பெருந்தெரு - A13 (கொழும்பு. இரத்தினபுரி, மட்டக்களப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் பற்றிய பொது விடயங்கள்

| | | |
|---|---|---|
| உலகின் பெரிய தீவு | - | கிறின்லாந்து |
| உலகின் பெரிய பாலைவனம் | - | சகாரா |
| உலகின் பெரிய காடு | - | வாஸ்ட்கனிப்பரோஸ் |
| உலகின் பெரிய நாடு | - | ரஷ்யா |
| உலகின் பெரிய கண்டம் | - | ஆசியா |
| உலகின் பெரிய சமுத்திரம் | - | பசுபிக் |
| உலகின் பெரிய தீபகற்பம் | - | அரேபியா |
| உலகின் பெரிய தீவுக்கூட்டம் | - | இந்தோனேசியா |
| உலகின் பெரிய வளைகுடா | - | மெக்ஸிக்கோ |
| உலகின் பெரிய பூங்கா | - | உட்பப்பலலோ |
| உலகின் பெரிய கடல் | - | தென்சீனக்கடல் |
| உலகில் பெரிய தேசிய கீதநாடு | - | கிரேக்கம் |
| உலகின் பெரிய ஜனநாயக நாடு | - | இந்தியா |
| உலகின் பெரிய நகரம் | - | டோக்கியோ |
| உலகின் பெரிய கிரிக்கட் மைதானம் | - | ஈடன் கார்டன் |
| உலகின் மிக உயரமான மலைச்சிகரம் | - | எவரெஸ்ட் |
| உலகின் உயரமான ஏரி | - | டிடிகா |
| உலகின் உயரமான மலைத்தொடர் | - | இமயமலை |
| உலகின் உயரமான பீட பூமி | - | திபெத் |
| உலகின் உயரமான தீபகற்பம் | - | இந்தியா |
| உலகின் கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| உலகின் கூடிய மழைவீழ்ச்சி பெறும் இடம் | - | சீறாப்பூஞ்சி |
| உலகின் கூடியோர் பின்பற்றும் மதம் | - | கிறிஸ்தவம் |
| உலகின் கூடிய மக்களால் பேசப்படும் மொழி | - | சீனமொழி |
| உலகின் கூடிய சனத்தொகை கொண்ட நாடு | - | சீனா |
| உலகின் கூடிய வானொலி நிலையம் உள்ள நாடு | - | அமெரிக்கா |
| உலகின் அதிவேகமான விலங்கு | - | சிறுத்தைப்புலி |
| உலகின் நீளமான நதி | - | நைல்நதி |
| உலகின் நீளமான மலைத்தொடர் | - | அன்டீஸ் மலைத்தொடர் |
| உலகின் மிக நீளமான சுவர் | - | சீனப்பெருஞ்சுவர் |
| உலகின் மிகச் சிறிய தேசிய கீதம் | - | ஜப்பான் |
| உலகின் மிக சிறிய உயிரினம் | - | ரீங்காரப் பறவை |
| உலகின் மிகச் சிறிய கண்டம் | - | அவுஸ்திரேலியா |
| உலகின் மிகச்சிறிய நாடு | - | வத்திக்கான் |
| உலகில் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு | - | வத்திக்கான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- இலங்கையில் மிகப்பெரிய சமவெளி - ஹோட்டன்
- இலங்கையில் பிரசித்தி பெற்ற இயற்கை வனம் - சிங்கராஜவனம்
- இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - பம்பரகந்தை
- இலங்கையில் மிக உயரமான மேட்டு நிலம் - ஹட்டன்
- இலங்கையில் மிக உயரமான அணைக்கட்டு - விக்டோரியா
- இலங்கையில் மிகப்பெரிய குளம் - சேனநாயக்கா சமுத்திரம்
- இலங்கையில் மிக நீளமான கடல் பாதை - வேலணை. புங்குடுதீவு
- இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைப்பது - வட்டவளை
- இலங்கையில் குறைந்தளவு மழைவீழ்ச்சி கிடைப்பது - மறிச்சுக்கட்டி
- இலங்கையில் பெரிய மாவட்டம் - அனுராதபுரம் (7180 சதுர கி. மீற்றர்)
- இலங்கையில் சிறிய மாவட்டம் - கொழும்பு (700 சதுர கிலோமீற்றர்)
- இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு
- இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம் - கொழும்பு
- இலங்கையின் தேசிய பறவை - காட்டுக்கோழி
- இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
- இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம். நீல அல்லி
- இலங்கையின் தேசிய விலங்கு - மர அணில்

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ம் | வருட | நிறைவு | விழா | - | காகித விழா |
| 2ம் | வருட | நிறைவு | விழா | - | பருத்தி விழா |
| 10ம் | வருட | நிறைவு | விழா | - | தசாப்த விழா |
| 15ம் | வருட | நிறைவு | விழா | - | பளிங்கு விழா |
| 20ம் | வருட | நிறைவு | விழா | - | பீங்கான் விழா |
| 25ம் | வருட | நிறைவு | விழா | - | வெள்ளி விழா |
| 30ம் | வருட | நிறைவு | விழா | - | முத்து விழா |
| 40ம் | வருட | நிறைவு | விழா | - | மாணிக்க விழா |
| 50ம் | வருட | நிறைவு | விழா | - | பொன் விழா |
| 60ம் | வருட | நிறைவு | விழா | - | வைரவிழா |
| 75ம் | வருட | நிறைவு | விழா | - | பவள விழா |
| 80ம் | வருட | நிறைவு | விழா | - | அமுத விழா |
| 100ம் | வருட | நிறைவு | விழா | - | நூற்றாண்டு விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணணியின் பயன்கள்

- கற்றல் கற்பித்தல் வினைத்திறன் உள்ளதாக மாற்றுதலுக்கு கணணி உதவுகின்றது.
- பாட விடயம் தொடர்பான இறுவட்டுக்களை கற்றல் கற்பித்தலின் போது பயன்படுத்தல்
- Power Point மூலம் slides தயாரித்து கதையின் போது பயன்படுத்தல்
- Digital Video, Camera மூலம் பெறப்படும் Photo, Video என்பவற்றை கற்றலுக்கு பயன்படுத்தல்
- மிக இலகுவாக கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம்
- மாணவர்களின் கணிப்பீட்டு, மதிப்பீட்டு, புள்ளிகளை இலகுவாக தயாரித்தல்
- கற்போரின் சுய கற்றலை மேம்படுத்தக்கூடிய ஆற்றல் கணணிக்கு உண்டு
- கடிதம், அழைப்பிதழ்கள், தகவல்களை சேகரித்தல், வினாத்தாள் தயாரித்தல் என்பவற்றுக்கு கணினி உதவுகின்றது.

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள் அது உங்கள் கடமையை பாழாக்கி விடும் கடமையைப் பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்

-அப்துல்கலாம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழியும் கலை இலக்கியமும்

மொழிகளுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| தமிழ் | - பக்தி மொழி |
| ஆங்கிலம் | - வணிக மொழி |
| பிரெஞ்ச் | - காதல் மொழி |
| இத்தாலி | - இசை மொழி |
| கிரேக்கம் | - சட்டமொழி |
| உருது | - கவிதை மொழி |

உலகின் முதலாவது தமிழ் புத்தகம்
- வணக்கம்

தமிழில் முதலாவதாக வெளிவந்த மாத இதழ்
- மாதத்திசைச் சரிதை

தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர்
- வ.வே.சு.ஐயர்

தமிழில் தோன்றிய முதலாவது இலக்கண நூல்
- தொல்காப்பியம்

தமிழில் தோன்றிய முதலாவது குழந்தைப்பத்திரிகை
- பாலதீபிகை

தமிழில் வெளியான முதலாவது நாவல்
- பிரதாப முதலியார் சரித்திரம்

> கட்டளையிட விரும்புபவன் முதலில்
> பணிவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்
> -
> -அரிஸ்ரோட்டில்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல்
- அசன்பேயின் சரித்திரம்

முதல் தமிழ் அகராதியைத் தொகுத்தவர்
- நா.கதிர்வேற்பிள்ளை

தமிழில் வெளியான நூல்களில் ஆகக் கூடுதலாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்
-திருக்குறள்

முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற நாடு
- மலேசியா

தமிழ்ச் சிறுகதை இலக்கிய மேதையென அழைக்கப்படுபவர்
- புதுமைப்பித்தன்

ஈழத்து முத்தமிழ் வித்தகர்
- சுவாமி விபுலாநந்தர்

முதன்முதலில் வெளிவந்த தமிழ் அகராதி
- சதுர அகராதி

தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல்
- மோகனாங்கி

இலங்கையில் முதன்முதல் தமிழில் வெளிவந்த பத்திரிகை
- உதயதாரகை

உலகப்பொதுமறை என அழைக்கப்படும் நூல்
- திருக்குறள்

குறை கூறும் ஆட்டத்தை விளையாடாதே அடுத்தவரிடம் குறை காணும் குணம் கொள்ளாதேஉன்னால் அவரோடு இணங்கி கைகோர்த்து நடக்கமுடிந்தால் நல்லது இல்லையேல் அவர் பாதையில் அவர் செல்ல ஒதுங்கி வழிவிடுதலே உன்னதம்
-விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புகழ்பெற்ற நூல்களும் – ஆசிரியர்களும்**

| | |
|---|---|
| மகாபாரதம்(மூலம்) | -வியாசர் |
| மகாபாரதம்(தமிழ்) | -வில்லிபுத்தூரர் |
| இராமாயணம் (மூலம்) | -வியாசர் |
| இராமாயணம் (தமிழ்) | -கம்பர் |
| சிலப்பதிகாரம் | -இளங்கோவடிகள் |
| நளவெண்பா | - புகழேந்தி |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| மணிமேகலை | - சீத்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - திருத்தக்க தேவர் |
| குண்டலகேசி | - நாதகுப்தனார் |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| சூளாமணி | - தோலாமொழித்தேவர் |
| கலிங்கத்துப்பரணி | - சயங்கொண்டார் |
| தேம்பாவானி | - வீரமாமுனிவர் |

எல்லோரையும் நம்புவது பயங்கரமானது. ஆனால் யாரையும் நம்பாமல் இருப்பது மிகவும் பயங்கரமானது.

**-ஆபிரகாம்லிங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**துறைகளும் தந்தையர்களும்**

| | |
|---|---|
| கணனி | - சாள்ஸ்பபேஜ் |
| கணிதம் | - ஆர்கிமிடிஸ் |
| கணக்கியல் | - லூக்காபெசியோலி |
| கம்யூனிசம் | - கார்ள்மாக்ஸ் |
| மருத்துவம் | - கிப்போக்கிரட்டிஸ் |
| மரபியல் | - கிரகர்மென்டல் |
| மின்சாரம் | - மைக்கல்பரடே |
| முத்திரை | - சேர் ரோலன்டஹிட் |
| நவீன ஓவியம் | - பிக்காசோ |
| நவீன பொருளாதாரம் | - அடம்சிமித் |
| நவீன ரொக்கட் | - கோடார்ட் |
| இரசாயனம் | - ஃபரைட்ரிச்ஒவர் |
| அரசியல் | - அரிஸ்ரோட்டில் |
| பௌதீகம் | - சேர் ஐசாக் நியூட்டன் |
| விண்வெளியியல் | - சியோல்கோப்ஸ்கி |

எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல முக்கியம் எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதே முக்கியம்

**- அன்னை திரேசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை தொடர்பான தகவல்கள்

| | |
|---|---|
| அதிக மாவட்டங்கள் கொண்ட மாகாணம் | - வடமாகாணம் |
| மிகப்பெரிய மாகாணம் | - வடமத்திய மாகாணம் |
| மிகப்பெரிய மாவட்டம் | - அனுராதபுரம் |
| மிகச்சிறிய மாவட்டம் | - கொழும்பு |
| சனத்தொகை கூடிய மாவட்டம் | - கொழும்பு |
| சனத்தொகை குறைந்த மாவட்டம் | - முல்லைத்தீவு |
| மிகவும் குளிர்கூடிய மாவட்டம் | - நுவரெலியா |
| அதிக மழைவீழ்ச்சியைக் கொண்ட பிரதேசம் | - வட்டவல |
| இலங்கையின் தேசிய மரம் | - நாகமரம் |
| இலங்கையின் தேசியப்பறவை | - காட்டுக்கோழி |
| இலங்கையின் தேசிய விளையாட்டு | - கரப்பந்தாட்டம் |
| இலங்கையின் தேசிய விலங்கு | - மரஅணில் |
| இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் | - ஆனந்த சமரக்கோன் |

**இலங்கையின் மாகாணங்களுக்குரிய தலைநகரங்கள்**

| | |
|---|---|
| வடமாகாணம் | - யாழ்ப்பாணம் |
| வடமத்தியமாகாணம் | - அனுராதபுரம் |
| வடமேல்மாகாணம் | - குருநாகல் |
| மத்தியமாகாணம் | - கண்டி |
| மேல்மாகாணம் | - கொழும்பு |
| சப்ரமுவ மாகாணம் | - இரத்தினபுரி |
| ஊவாமாகாணம் | - பதுளை |
| கிழக்கு மாகாணம் | - திருகோணமலை |
| தென்மாகாணம் | - காலி |

யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே ஒரு வேளை மாற நினைத்தால், ஒவ்வொரு மனிதர்களுக்கும் மாறவேண்டி வரும்

- கண்ணதாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இலங்கையில் மாகாணங்களுக்குரிய மலர்கள்**

வடமாகாணம் - வெள்ளைத் தாமரை
வடமத்தியமாகாணம் - எசல் பூ
வடமேல்மாகாணம் - டெட்டேரியா
மத்தியமாகாணம் - பெருஞ்சிவப்புமலர்
மேல்மாகாணம் - காட்டுமல்லிகை
சப்ரமுவ மாகாணம் - வெசாக்மலர்
ஊவா மாகாணம் - நரிவால் ஓர்சிட்
கிழக்கு மாகாணம் - நீலத்தாமரை
தென்மாகாணம் - ஹீன்டோவிட்டியா

**இலங்கையிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களும் அவை அமைந்துள்ள இடங்களும்**

தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
தெங்கு ஆராய்ச்சி நிலையம் - லுனுவில
விவசாய ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பலகாம
பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பலகாம

**இலங்கையில் உள்ள பிரதேசங்களின் பழைய பெயர்கள்**

திருகோணமலை -கோகண்ண
காங்கேசன்துறை - ஜம்புகோளப்பட்டினம்
கொழும்பு - கொலன்தொட்ட
கண்டி - செங்கடகல
புத்தளம் - குத்தஹலக
சிலாபம் - சலபத்த
அநுராதபுரம் - அனுராதபுர
பொலனறுவை - சனநாதபுரம்
மன்னார் - மாந்தை
மன்னார் - மாந்தை

> இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள் இல்லையேல் உளுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.
>
> - விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| நயினாதீவு | - நாகதீப |
| ஊர்காவற்துறை | - ஊரா தொட்ட |
| சிகிரியா | -சிங்கஹிரி |
| சிவனொளிபாதலை | - ஶ்ரீபாத |
| கதிர்காமம் | -சந்தனகாமம் |
| மிகிந்தலை | -பேத்தியகிரி |
| தம்புள்ள | -கம்புள்ள |

**உலக நாடுகளின் மாற்றுப்பெயர்கள்**

| | |
|---|---|
| உலகத்தின் கூரை | - திபெத் |
| சூரியன் உதிக்கும் நாடு | - ஜப்பான் |
| நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | - நோர்வே |
| நைல் நதியின் கொடை | - எகிப்து |
| புனித நாடு | - பலஸ்தீனம் |
| அதிகாலை அமைதி நாடு | - கொரியா |
| இருண்ட கண்டம் | - ஆபிரிக்கா |
| இந்தியாவின் பூந்தோட்டம் | - பெங்களூர் |
| இந்தியாவின் நுழைவாயில் | - மும்பை |
| முடிவில்லா நகரம் | - ரோமாபுரி |
| அரண்மனை நகரம் | - கல்கத்தா |
| கனவுக் கோபுரங்களின் நகரம் | - ஒக்ஸ்போர்ட் |
| பொற்கதவு நகரம் | - சன்பிரான்ஸிஸ்கோ |
| வெள்ளை யானை நாடு | - தாய்லாந்து |
| மரகதத்தீவு | - அயர்லாந்து |

நம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்து விடும் பூவாக இருந்துவிடக் கூடாது மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும்

- அரிஸ்ரோட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சர்வதேச நிறுவனங்கள்**

| | |
|---|---|
| ஐக்கிய நாடுகள் சபை | -UNO |
| ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் | -UNESCO |
| ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் | -UNICEF |
| சர்வதேச நாணய நிதியம் | -IMF |
| உலக சுகாதார நிறுவனம் | -WHF |
| உணவு விவசாய நிறுவனம் | -FAO |
| உலக வானிலை அமைப்பு | -WMO |
| அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் | -UNHCR |
| சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் | -ICRO |
| கடல்சார் செயற்பாடுகளுக்கான பன்னாட்டு அமைப்பு | -IMO |

**சர்வதேச குறியீடுகள்**

| | |
|---|---|
| வெண்புறா,ஒலிவ் மரத்தின் இலை | -சமாதானம் |
| சிவப்புச் சக்கரம் | -வளர்ச்சி |
| சிவப்புக் கொடி | - புரட்சி |
| கறுப்புக் கொடி | -எதிர்ப்பு |
| மஞ்சள் கொடி | - தொற்று |
| சிவப்பு விளக்கு | -ஆபத்து,நிறுத்து |
| பச்சை விளக்கு | -அனுமதி |
| வெள்ளைக் கொடி | - சமாதானம் |
| தாமரை | - பண்பாடு,நாகரீகம் |
| தீப்பந்தம் | - ஒலிம்பிக் |
| செஞ்சிலுவை | - மருத்துவ உதவி |
| அரைக்கம்பத்தில் கொடி | - இரங்கல் |

எல்லோரையும் நம்புவது பயங்கரமானது ஆனால்,
யாரையுமே நம்பாமல் இருப்பது மிகவும் பயங்கரமானது.

- ஆபிரகாம் லிங்கன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சேவைகளும் வழங்கும் நிறுவனங்களும்

| | |
|---|---|
| ❖ பொதிகள், தந்தி, அனுப்புதல் | தபாலகம் |
| ❖ பணம் சேமிப்பு, காசோலை மாற்றுதல் | வங்கி |
| ❖ தேசிய அடையாள அட்டை | ஆட்பதிவுத்திணைக்களம் |
| ❖ காசுக்கட்டளை அனுப்புதல், மாற்றுதல் | தபாலகம் |
| ❖ மின்சாரம் வழங்கல் | இலங்கை மின்சாரசபை |
| ❖ குடிநீர் வழங்குதல் | நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை |
| ❖ தொலைபேசி சேவை | ஸ்ரீலங்கா டெலிக்கொம் (SLT) |
| ❖ தபால் சேவை வழங்கல் | இலங்கை தபால் திணைக்களம் |
| ❖ விமானசேவை வழங்கல் | ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் |
| ❖ நாணயங்களை அச்சிடுவது | இலங்கை மத்திய வங்கி |
| ❖ நன்னடைச் சான்றிதழ் பெறுவது | கிராமசேவையாளர் |
| ❖ வதிவிட உறுதிப்படுத்தல் | கிராம சேவையாளர் |
| ❖ துவிச்சக்கரவண்டி அனுமதி தகடு பெறல் | பிரதேச சபை |
| ❖ வியாபார அனுமதிப்பத்திரம் பெறல் | பிரதேசசபை |
| ❖ வாக்காளர் அட்டை பெறல் | மாவட்ட தேர்தல் அலுவலகம் |
| ❖ திருட்டுப்பற்றிய முறையிடல் | பொலிஸ் நிலையம் |
| ❖ பிறப்பு, இறப்பு, திருமண பதிவு | பிரதேச செயலகம் |
| ❖ பொதுநூலகம் பராமரித்தல் | பிரதேசசபை |
| ❖ விளையாட்டு கழகமொன்றின் பதிவு | பிரதேச செயலகம் |
| ❖ கடவுச்சீட்டைப் பெறல் | குடிவரவு குடியகல்வு திணைக்களம் |
| ❖ சூழல் சுத்திகரிப்பு | பிரதேச சபை |
| ❖ கல்வி சார்பான வேலைத்திட்டம் | பாடசாலை |

செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான், செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.

-பெர்னாட்ஷா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கை வைத்திய முறைகள்.

### விஷவைத்தியம்

**புலிமுகச் சிலந்தி**

புலிமுகச் சிலந்தி கொட்டினால், பலாக்காயின் பாலைக் கொட்டின வாயிலில் வைத்து, தேங்காய் மட்டையில் நெருப்பு மூட்டி, அது சூடேறிய பின், கொட்டின இடத்தின் மேல் பிடிக்கின் விஷம் நீங்கும்.

**தேள் அல்லது கொடுக்கன்**

இதற்கு உடனே ஒரு ஈர வெங்காயத்தை எடுத்து அந்தக் கடிவாயிலில் கொஞ்ச நேரம் தேய்ப்பின் கடுப்புத் தீர்ந்துவிடும். இது கைகண்ட முறையாகும்.

மட்டைத்தேள், நண்டு வாய்க்காலி, தேனீ, குளவி

1. இவைகளுள் ஒன்று கொட்டினால், உடனே சுண்ணாம்பைக் கடிவாயில் பூசி பின்னர் ஒரு கத்தரிக்காயைச் சுட்டு அதன்மேல் வைத்துக் கட்டிவிடின் குணமுண்டாகும்.
2. சுண்ணாம்பையும் ஒட்டறையையும் சேர்த்து மசித்துக் கடிவாயிலிற் போட்டாற் குணமாகும்.
3. உருளைக் கிழங்கை கத்தியால் சீவி அதை அரைத்துக் கடிவாயிலில் போடுதலாலும் சுகங்காணும்.
4. ஒரு சீலையில் மண்ணெண்ணெயைச் சிறிது நேரம் விட்டுக்கொண்டிருந்தாலும் சுகங்காணும்.

**எலிக்கடி**

இதற்கு இரு மேசைக்கரண்டி, குப்பைமேனிச் சாறும், சம அளவு நல்லெண்ணெய்யும் ஒன்று சேர்த்து ஒரு முறைகுடித்தல் வேண்டும். மூன்று நாட்கள் பச்சை அரிசிக் கஞ்சி மாத்திரம் குடிக்கலாம். நான்காம் நாள் ஸ்நானஞ் செய்க. அன்று உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்க. புளிமட்டுஞ் சேர்க்கப்படாது. ஐந்தாம் நாள்முதல் பத்தியமில்லை

எலியின் மலத்தைத் தூள் செய்து வாழைப் பழத்தினுள் வைத்து மூடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாயிற்போட்டு மென்று தின்னுமாறு செய்தல் வேண்டும். இப்படி மூன்று நாள் காலையில் உண்பித்துப் பத்தியங் காக்கும்படி செய்தால் குணமுண்டாகும். எலிக்கடிக்குப் பொன்னைக் காய்ச்சிச் சுடுவது நாட்டு வழக்கம்.

நாய்க்கடி.

கோழி மலத்தைக் கடிவாயிலில் வைத்துக் கட்டுக. இப்படி ஐந்து நாள் காலையில் செய்துவரின் நாய் விஷம் நீங்கும்.

காணாக்கடி

குப்பைமேனி இலை, மிளகு ஆகிய இரண்டையும் அரைத்து எடுத்து, சிறுபிள்ளையின் மூத்திரத்தில் குழப்பி வீக்கத்தில் பூசினால் குணங்காணும். அடுப்புச் சாம்பல் அல்லது திருநீறு பூசினுங் குணங்காணும்.

ஒரு குடம் நீரில் பிடி அறுகம் புல்லைப் போட்டு, இரண்டு மணிநேரம் ஊறவைத்து அந்நீரில் ஸ்நானஞ் செய்த பின், ஏழு மிளகைச் சப்பி விழுங்கின் குணங்காணும்.

மண்ணுணிப்பாம்புக்கடி

இது கடித்தால் நல்லெண்ணெயுங் குரக்கன் கூழுங் கலந்து ஒரு வாரம் வரையில் உள்ளுக்குக் கொடுப்பதுண்டு.

ஓணான்கடி

ஓணான் கடித்த இடத்தில் பிறையைப் போன்ற காயம் உண்டாகும். அப்போது வீக்கம், நமைச்சல், குத்தல், நோவு, சோருதல், மலத்தில் பல நிறந் தோன்றல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு இரண்டு மேசைக் கரண்டியளவு மூங்கிற் குருத்தின் ரசம் எடுத்து, அதில் வெருகடி அளவு மிளகுப் பொடி சேர்த்து, ஐந்து நாள் இரண்டு வேளையுங் குடித்தால் இவ்விஷந்தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சில விஷங்கள் சகலவற்றிற்கும் சிகிச்சை**

தயிர்வளை, குப்பைமேனி, கறிமுருங்கையிலை ஆகிய இவற்றுள் ஒன்றின் சாற்றை, வலது பக்கம் விஷம் தீண்டியிருந்தால் இடது காதிலும், இடது பக்கம் விஷந் தீண்டியிருந்தால் வலது காதிலும் பிழியின் விஷம் நீங்கும்.

**மயிர்க்கொட்டி**

மயிர்க்கொட்டிப் பூச்சி உடம்பில் பட்டுவிட்டால் அதன் மயிர் பட்டவிடத்தில் நல்லெண்ணெய்யைத் தடவி, மயிரை கூரிய கத்தியினால் வழித்து விட்டு, பின்னும் நல்லெண்ணெய்யைத் தடவினால் வீக்கமும் அரிப்பும் நீங்கும்.

**மயிர்க் கொட்டியின் மயிர் கண்ணில் பட்டுக் கண்ணை வீங்கச் செய்து கொடுக்கும் வேதனைக்குக் கைமுறை**

நன்றாகப் பழுத்த தேன்கதலி வாழைப்பழத்தை எடுத்துத் தோலை நீக்கிவிட்டு, அதை நல்லெண்ணெய்யில் அமுக்கி எடுத்துக் கண்ணில் வைத்துக் கட்டிக் கொண்டு படுத்துறங்கின் குணங்காணும். இது காலஞ் சென்ற பிரபல வைத்தியர் கஸ்தூரி வேலுப்பிள்ளை அவர்களது கைமுறையாகும்.

**வயிற்றுளைவு**

வயிற்றுக்கடுப்புக் கண்டால் அதாவது வயிறு கடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாக வயிற்றுளைவுக்கு ஆரம்பமென நாங்கள் எண்ண வேண்டியது, உடனே ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெய்யைக் கொடுத்து அடுத்தநாள் தொடக்கம் கீழே காணப்படும் கைமுறைகளில் ஒன்றை உபயோகித்தால் வியாதி குணமடையும்.

மேலே சொல்லியவாறு ஆமணக்கெண்ணெய் கொடுத்து, வயிற்றிலிருந்து மலத்தைக் கழற்றியதன் பின்புதான், இக்கைமுறைகளுள் ஒன்று கொள்ளப்படுதல் வேண்டும்.

எருமைப் பாலைக் கறந்தவுடனே எலுமிச்சம் பழரசம் விட்டு 3 காலையில் குடித்துவரின் குணம் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாங்கள்ளில் எலுமிச்சம் பழ ரசம் விட்டு. 3 காலையில் குடித்துவரின் குணம் உண்டாகும்.

அதிகாலையில் ஸ்நானஞ் செய்து விட்டு, ஆட்டுப் பாலைக் கறந்தவுடன், அப்பாலில் அரைக்காற்படி எடுத்து, பழம்பாக்குப் பிரமாணமுள்ள ஒரு மாதுளம்பிஞ்சை அதில் அரைத்துப் போட்டுக் கலக்கிக் குடித்தல் வேண்டும். இப்படி மூன்று காலை செய்து வந்தால் குணங்காணப்படும்.

முற்றிப் பழுத்த மாதுளம்பழங்களைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, ஒரு பழத்தின் சாற்றை எடுத்து அதில் ஒரு கரண்டி கற்கண்டுப் பொடி போட்டுக் குடிக்க இப்படிக் காலை மாலைகளில் 2 நாள் நாலுமுறை குடித்துவரின் வியாதி குணமடையும்.

### குழந்தைகளுக்கு வயிற்றுளைவு கண்டால் சிகிச்சை

ஆரம்பத்தில் மலமானது கொஞ்சங் கொஞ்சமாய் அடிககடி போய்க் கொண்டிருக்கும். உடனே, ஆறிய வெந்நீரில் எலுமிச்சம் பழரசம் விட்டுக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும். பின்னர் உலையில் அரிசி போட்டு அது இரண்டொரு கொதி கொதித்தவுடன், அக்கொதி நீரில் கொஞ்சம் இறுத்து ஆற வைத்து, அதில் எலுமிச்சம் பழரசம் விட்டுக்கொடுத்தல் வேண்டியது. மற்ற நேரங்களில் தேநீரில் எலுமிச்சம் பழரசம் விட்டுக்கொடுக்க வேண்டும். அவற்றினால் நோய் தணியாவிட்டால், ஆறிய வெந்நீரில் எலுமிச்சம் புளிரசமும், ஒரு தேக்கரண்டி தேனும் விட்டுக் கொடுக்கின் குணம் வரும்.

### ஜலதோஷம்

### ஜலதோஷமும் ஜலக்கடுப்பும்

வீசம் இறாத்தல் கற்கண்டை அரைப்படி நீரில் போட்டு நாலொன்றாக வற்றச் செய்து எடுத்து, சூடு ஆறியபின், அதில் பாதமி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து விட்டுக் குடித்து விடின், ஜலதோஷம் ஜலக்கடுப்பு என்பன உடனே தீரும். வியர்வை உண்டாகும் அல்லது நீர் இறங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜலதோஷம் நீரேற்றம் தலைப்பாரம் முதலியவற்றிற்கு

விபூதி, புழுங்கலரிசி, குரக்கன், வேப்பந்தூள் ஆகிய இவ்வாறான ஒன்றைப் பொட்டணம் செய்து, அதன் மீது ஓர் இரவு தலைவைத்துப் படுக்கின் தலைப்பாரம் முதலியன நீங்கும்.

தலைவலி, மண்டையிடி, கபாலவலி, முதலியவற்றிற்கு எண்ணெய்.

நல்லெண்ணெய், குப்பைமேனிச்சாறு ஆகிய இவற்றை வகைக்கு ஒருபடியாக எடுத்து ஒன்று சேர்த்துக் காய்ச்சி வடித்து முழுகி வருதலால் நல்ல குணங்காணும்.

## தலைவலிக்குப் பற்று

மிளகை முலைப்பாலில் அரைத்துக் கொதிக்க வைத்துப் பூசின் மாறும்.

## நயன ரோகங்கள்

### கண்ணில் மருந்திட்ட பின் மேற்கொள்ள வேண்டிய முறை

காற்று,வெய்யில், லாகிரி வஸ்துக்கள், குளிர்ந்த சலம், கைப்பு, புளிப்பு, கரப்பான் பதார்த்தங்கள், காரமுள்ள வஸ்துக்கள் ஆகிய இவை முதலியன கண் ரோகத்தை விருத்தி செய்வதால் இவைகளை நீக்கி வைப்பது மிகவும் உத்தமாகும்.

## கண்கட்டிக்குச செய்யப்படும் சிகிச்சைகள்

கறி மிளகை சுடுநீரில் விட்டு அரைத்துக் கட்டியிற் பூசிவிடின் குணமாகும். முலைப்பாலில் சங்கை உரைத்துப் பூசின் கட்டி கரைந்துவிடும். பூனை வாலால் கட்டியைத் தடவின் கட்டி அமரும். ஒரு மிளகுப் பிரமாணம் புனுகு எடுத்துக் கட்டியின் மேல் பூசிவரின் குணமாகும். செஞ்சந்தனத்தை முலைப்பாலில் உரைத்துப் பூசின் கட்டி அமர்ந்து விடும்.

## கண் எரிவு

மாதுளந் துளிரைத் தண்ணீரில் அவித்து அந்த நீரினால் காலை மாலை கண் கழுவிவரின் எரிவு நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கண்ணில் தூசி, துரும்பு ஆகியவைகள் விழுந்துவிட்டால்**

இரண்டு நிமிஷம் வரையில் கண்ணை மூடிக்கொண்டிருக்கின், அப்போது உண்டாகும் கண்ணீரானது தூசியை ஒரு பக்கத்தில் கொண்டு போய் ஒதுக்கி விடும்.

**கண் பூவிற்கு**

தேட்கொடுக்கியிலையையும், நந்தியாவட்டைப் பூவையும் சம நிறையாக எடுத்து நன்றாகக் கசக்கி பிழிந்து, அந்த ரசத்தைத் கண்ணில் விட்டு வந்தால் 4,5 வேளைகளில் கண்பூ கரைந்விடும்.

**கண் கலங்கல்**

ஒரு பிள்ளையினது சிறுநீரைத் தெளிய வைத்து மூன்று நாள் காலை மாலையில் கண் கழுவிவரின் கண்கலங்கல் நீங்கும்.

**கண் அரிப்பு**

புளியமிலையை அவித்தெடுத்த நீரால் காலையில் கண்களைக் கழுவிவரின் அரிப்பு நீங்கும்.

**கண்வலி, கண் வீக்கம் முதலியவைகளுக்கு**

கறியுப்பைக் கரைந்த நீரால் அடிக்கடி கண்ணைக் கழுவிவரின் இவ்வியாதிகள் நீங்கிப் பார்வை தெளிவாகும்.

**கண் சிவந்து குத்து நோவெடுத்தால்**

மாதுளந்துளிர், கொவ்வையிலை ஆகிய இரண்டையும் அரைத்து அதனுடன் பச்சை வெண்ணெய்யைச் சேர்த்து புறவளையம் போடின் சுகமாகும்.

**சிறுபிள்ளைகளின் கண் சிவந்திருத்தல், நீர் வடிதல்**

மாதுளந் துளிரை அவித்து, அதன் நீரால் கண்களைக் கழுவிவரின் குணாங்காணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காதுரோகங்கள்

### வாயுவினால் உண்டாகும் காதுக்குத்து

ஒரு சிறு பெருங்காயத் துண்டை ஒரு சீலைத் துண்டால் சுற்றிக் காதின் துவாரத்தில் அடைத்து வைக்கில் குணம் காணும்.

ஒரு உள்ளிப்பல்லைக் காதில் வைத்து அடைத்து விட்டாலும் அது வாயுவைக் கண்டிக்கும்.

நல்லெண்ணெயில் பெருங்காயம் போட்டுக் கொதிப்பித்துக் காதில்விட்டு அடைத்தாலும் குத்து நீங்கும்.

### காதில் குறும்பி [அழுக்கு] இருக்கின் அதனால் உண்டாகும் குத்து

தயிர் வேளைச் சாறும் நல்லெண்ணெய்யும் சமனாக எடுத்து ஒன்று சேர்த்து 4, 5 துளிகள் காதில் விட்டடைக்கின் குணமாகும்.

### காதில் ஈ முதலாயின புகுந்தால்

குப்பை மேனிச் சாற்றில் சிறுநீர் சேர்த்துக் காதினுள் விடின் ஈ முதலாயின வெளிவரும்

வெள்ளெருக்குச் சாற்றில் 4, 5 துளிகள் காதினுள் விட்டாலும் உட்புகுந்த ஈ முதலாயின வெளிவரும்.

## இரண வைத்தியம்

### நகத்தில் காயப்பட்டு அது கிழிந்தால்

எலுமிச்சங் காயைச் சுட்டு 2,3 முறை கட்டிய பின்னர், மருதோன்றியிலையை அரைத்துக்கட்டுக.

### நோவுகள்

கர்ப்பூரம், மஞ்சள் பொடி ஆகியவற்றை ஒவ்வொரு கழஞ்சு வீதமாக எடுத்து ஒரு மேசைக் கரண்டி அளவு நல்லெண்ணெயில் போட்டுக் கொதிப்பித்து எடுத்து, எண்ணெய் நோவுள்ள இடத்தில் பூசி, கடுகை இதன் மீது வைத்துக் கட்டிவிடின் நோவு குணமடைவதுடன், காயமிருந்தால் அதுவும் மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பழுக்காத பருக்கள் அமருவதற்கு

இஞ்சியைத் தட்டிப் பிழிந்து, சாற்றை ஒரு ஏனத்தில் வைக்கின், சிறிது நேரத்திற்குள் அதன் அடியில் ஒருவகையான சுண்ணாம்பு தங்கும். அந்தச் சுண்ணாம்பை எடுத்துத் தேனில் குழப்பி, பருக்கள் மீது பூசின் அவை வற்றிவிடும்.

முள்முருக்கம் வித்தையும், குப்பைமேனி இலையையும் தண்ணீர் விட்டரைத்துப் பருக்கள் மீதுப் பூசின் அவை கரையும்.

### பருக்கள் உடைவதற்கு

ஈரவெங்காயத்தைச் சுட்டு அரைத்து பருவில் மகப்பு விட்டுப் பூசின் அது உடையும்.

உள்ளியை அரைத்துப், வீக்கத்தைச் சுற்றிப் பூசி ஈரவெங்காயத்தைக் சுட்டரைத்து முகப்பில் வைக்கின் பரு உடையும்.

### கட்டிகள் பழுப்பதற்கு

குருவிச்சம்பூ, வட்டத் துத்தியிலை, மாதுளங் கொத்து ஆகியவற்றைத் தேங்காய்ப்பால் விட்டு அவித்துக் கடைந்து, கட்டிகள் மீது வைத்துக் கட்டிவரின் அவை பழுத்து முகம் வைக்கும்.

### கட்டிகள் உடைவதற்கு

மாதுளை, வெள்ளறுகு, காட்டாமணக்கு எனபனவற்றின் துளிர் ஈரவெங்காயம், ஆகியவற்றை ஒரு கணக்காக எடுத்து, தேங்காய்ப் பால் விட்டு அவித்து கட்டிகள் மீது வைத்துக் கட்டிவிடின் அவை பழுத்து உடையும்.

### திராட்சைகள் கட்டிகள் உடைவதற்கு

கோழி முட்டையின் கோதை அரைத்து எலுமிச்சம் பழரசத்தில் குழைத்துக் கட்டிகள் மீது பூசின் அவை உடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புண் எரிவுக்கு நீர்ச்சீலை**

மஞ்சள், வசம்பு என்னும் இவற்றைச் சுட்டெடுத்த கரியும், ரசம், நீலம், கெந்தகம் ஆகிய இவைகளுள் ஒவ்வொன்றிலும் அரைக் களஞ்சும் எடுத்து, கள்ளு வார்த்தரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு சீலையில் ஏற்றி, எரியும் புண்ணின் மீது போடின், எரிவு மாறும்.

**கட்டிகள் உடைந்தபின் ஆணிச்சிதல் வெளிப்படுவதற்கு**

உள்ளியைத் தேங்காய்ப் பால் விட்டவித்துக் கடைந்து, புண்கள்மீது வைத்துக் கட்டினால் சீழ்ப்பிடித்த புண்ணின் அடிமுளை அழுகி வெளிவரும்.

**பருக்கள் உடைந்தபின் செய்ய வேண்டிய சிகிச்சை**

முற்றிய கத்தரிக்காய் ஒன்றைச் சுட்டுப் புண்ணில் கட்டிவிடுக. இப்படி நாள் ஒன்றில் 2 முறையாக 3 நாள் கட்டியபின்பு, இரும்புருக்கியிலையின் சாற்றை எடுத்து ஒரு துணியில் பூசிப் புண்ணின் மேல்போட்டு வைக்க வேண்டும். புண் மாறும் வரையில் ஒருநாளைககொரு தரமாகப் போட்டு வருக.

**புண்களின் சவ்வு கரைவதற்கு**

முற்றின முள் முருக்கம் பட்டையை எடுத்து மேற்புரணி போக்கி இடித்து, புண்கள் மீது வைத்துக் கட்டின் அவைகள் மூடிய தோல் தேய்ந்து கரைந்துவிடும்.

**புண்களின் விளிம்பு கரைவதற்கு**

மஞ்சளை வேப்பெண்ணையில் உரைத்துப் பூசின் விளிம்புகள் கரைந்து விடும்.

**புண்கள் ஆறுவதற்கு**

தாழம்பூவைச் சுட்டெடுத்த சாம்பலைப் புண்ணில் தூவிவரின் அது ஆறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரத்தையின் இலையையும் பூவையும் அரைத்து, புண்கள்மீது போட்டுவரினும் அவை குணமடையும்.

மருதோன்றியிலையை அரைத்துப் புண்கள் மீது போட்டுவரினும் அவை குணமடையும்.

பழஞ்சோற்றைத் தயிரில் குழைத்துக் கட்டிவரின் நாள்பட்ட புண்ணும் மாறும்.

கிருமி இரணங்கள் ஆறுவதற்கு

வேப்பம் பருப்பை அரைத்துக் கிருமி இரணங்கள் மீது வைத்துக் கட்டின், அது கிருமிகளை வெளிப்படுத்தி இரணங்களையும் ஆற்றும்.

முருக்கமிலைச் சாறு, கர்ப்பூரம் ஆகிய இவற்றைத் தேங்காயெண்ணெயில் காய்ச்சி, இரணங்களின் மேல் பூசினும் கிருமிகள் வெளிப்படும்.

பித்தவெடிப்பு

ஆலம்பாலை, அலலது இலுப்பெண்ணையைப் பித் வெடிப்புகளுக்குப் பூசுவது நாட்டுவழக்கம்.

செருப்பு அழுத்துவதால் உண்டாகும் புண்ணிற்கு

செருப்புத் தோலைச் சுட்டெத்த சாம்பரை, அல்லது புகையிலைக் காம்பைச் சுட்டெடுத்த சம்பாரைத் தேங்காயெண்ணெயில் குழைத்து அப்புண்ணின் மேல் பூசிவரின் அது ஆறிப்போகும்.

நகச்சுற்று

குமிழம்பழத்தைச் சுட்டு நகத்தில் வைத்துக் கட்டிவரின், நகச்சுற்று மாறும். சீழ் வெளிப்பட்ட பின்பு அம்மான் பச்சரிப் பாலைத் தடவிவரின் நகக்கண்ணுலுள்ள புண் ஆறிவிடும்.

நகச்சுற்று இலையை (காட்டு வெங்காய இலை) அனலில் வாட்டி நகத்தைச் சுற்றி கட்டிவிடினும் இந்நோய் மாறும்.

எலுமிச்சம் பழத்தை வேதனையுள்ள நகத்தின் மீது மூடிவைக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத் துயரத்தின் போது
# ஆறுதலளித்த நெஞ்சங்களுக்கு...

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்-உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு"

எமது அன்புத் தெய்வம், குடும்பத்தின் குலவிளக்கு, நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும், பின்னர் இலக்கம் 167/2 இறம்பைக்குளம் வவுனியாவில் பிள்ளைகளின் பராமரிப்பில் இருந்தபோதும் அக்கறையுடனும் கடமையுணர்வுடனும் சிகிச்சை மேற் கொண்ட வைத்தியர்கள், பராமரித்த தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் வவுனியா இல்லத்துக்கு வருகை தந்து அப்புச்சிக்கு ஆறுதல் வார்த்தை கூறிய உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் 23.11.2015 இல் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவியோருக்கும் வட்டுவாகல் இல்லத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கின் போது கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் பதாதைகள் மூலமும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலித்தோருக்கும் தொலைபேசி வயிலாக ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

வட்டுவாகல்,
முல்லைத்தீவு

இங்ஙனம்
குடும்பத்தினர்
0771000660
077025253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலின் இறகுகள்



○ சின்னர் ○ வெற்றிவேலு + ○ பச்சைமுத்து + ○ நாயகம்

○ மயில்வாகனம் ○ அழகம்மா ○ சண்முகம்

○ ஆறுமுகம் + மாதாத்தை ○

நாகலிங்கம் ○
கார்த்திகேசு ○
தங்கம்மா ○
கற்பகம் ○

○ திருஞானமூர்த்தி

கோகிலாதேவி + பாலசிங்கம்
- சந்திரசீலன் + பாமினி → சங்கீதா, தக்ஷணன்
- சுமணாவதி + சிறீமுருகன் → பருணிதன், துருபதன்
- பாஸ்கரன் ○

கணேசம்மா + செல்வரத்தினம்
- நிர்மலதீபன்
- நிர்மலறஜனி + சிவகுமார் → அகல்ஜன்
- நிர்மலவேணி + சதீஸ்மோகன் → அனுப்பிரியன், சுகாஸ்
- நிர்மலவேந்தன் + வினோபா → வெண்பா

பத்மநாதன் + சாந்தநாயகி → நிரோஷன், டிலக்ஷன் (பபா)

கலாநிதி + தங்கராசா
- மதிவதனா + ஸ்ரீமுருகன் → ஸ்ரீமதீசன், சகானா, ஸ்ரீராம்
- சுவர்ணா ○ + பாபு → மிதுஷனா, நேருஜா, சனோஜித்
- ரமணன் ○
- கோமதன்

கெங்காதேவி + மார்க் அன்ரோ → நிலான் ○, அனுஷன்

தவனேஸ்வரி + மதிபாலன் → பேபிஷா, விதுஷன்

வேகாவனம் (முல்லைவேந்தன்) + துஷாந்தி → வேதுஷன், விதுஷன்

○ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org